# பாஸ்கா காலத்தின் இரண்டாம் ஞாயிறு

# திருவழிபாடு ஆண்டு - C

# 2025-04-27

(*இன்றைய வாசகங்கள்:*

*திருத்தூதர்பணி நூலிலிருந்து வாசகம் 5:12-16,*

*திருப்பாடல்கள் 118: 2-4, 22-27,*

*திருத்தூதர் யோவான் எழுதிய திருவெளிப்பாட்டிலிருந்து வாசகம் 1: 9-11*a, 12-13, 17-19,

*யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 20:19-31)*

*திருப்பலி முன்னுரை*

*உங்களுக்கு அமைதி உரித்தாகுக!*

*அன்புக்குரியவர்களே, பாஸ்கா காலத்தின் இரண்டாம் ஞாயிறு திருவழிபாட்டுக்கு நம் ஆண்டவர் பெயரால் உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கிறோம். நாம் இன்று இறை இரக்கத்தின் ஞாயிறை சிறப்பிக்கின்றோம். இறைமகன் இயேசு இந்த நாளில்தான் திருத்தூதர்கள் வழியாக, திருச்சபைக்கு பாவமன்னிப்பு வழங்கும் அதிகாரத்தை வழங்கினார். இறைவனின் இருப்பை கேள்வி கேட்கும் அளவுக்கு சந்தேகம் கொண்டிருந்தாலும், அவர் நம் மீது இரக்கம் கொண்டு அவரது உடனிருப்பை உணர்த்துகிறார் என்பதை புரிந்துகொள்ள இன்றைய நற்செய்தி அழைப்பு விடுக்கிறது. கிறிஸ்து இயேசுவின் உயிர்ப்பை காணாமலே நம்பவும், அவருக்கு சான்று பகரவும் அழைக்கப்பட்டுள்ள நாம் விசுவாசத்தில் வளர வரம் வேண்டி, இந்த திருப்பலியில் பக்தியுடன் பங்கேற்போம்.*

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*அன்புத் தந்தையே இறைவா!*

*உயிர்ப்பின் சாட்சிகளான திருத்தூதர்களைப் பற்றிப் பெருமையாகப் பேசின மக்களைப் போல் இக்காலத்திய மக்கள் இருக்கவும், அதற்கேற்றார் போல் எமது தாய் திருஅவையின் தலைவர்கள் தம்மை உயிர்த்த இயேசுவில் கட்டமைத்திடவும் அருள் புரிய இறைவா, உம்மை வேண்டுகிறோம்.*

*வாழ்கின்ற இயேசுவின் தந்தையே!*

*நாங்கள் எல்லோரும் இறைமகனோடு இணைந்து அவருக்காக யாவற்றையும் செய்திட வேண்டிய வரத்திற்காக உம்மை வேண்டுகிறோம்.*

*உண்மையின் நிறைவாம் இறைவா,*

*உண்மையின் ஒளியை ஏற்க மனமின்றி, இருளில் வாழும் எம் நாட்டு மக்கள் அனைவ ரும், உம் திருமகனின் உயிர்ப்பில் உள்ள உண்மையை அறிந்துணர்ந்து, அதன் வழியாக நீர் மக்களுக்கு ஏற்பாடு செய்துள்ள மீட்பை பெற்றுக்கொள்ளவும் தேவையான அகத்தூண் டுதலை அளிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

*தந்தையே இறைவா!*

*உம் திருமகனையும் அவரது உன்னத உயிர்ப்பையும் அறியாதவர்களுக்காக உம்மை வேண்டுகிறோம். உலகம் அனைத்தும் அவரையே தம் மீட்பராக ஏற்றிடவும், படைப்பனைத்தும் அவரில் பற்றாயிருக்கவும் உம்மை வேண்டுகிறோம்.*

*பேரின்பமே இறைவா!*

*அகில உலக இளையோருக்காக உம்மை மன்றாடுகிறோம். இவர்களில் எத்தனையோ பேர் இறைமகனை ஏற்காது, அழிந்து போகும் மாந்தரைத் தம் மீட்பர்களாகக் கண்டிடும் அவலம் நீங்கி, இறைமகனில் இனிமையைக் கண்டுணர வரம் தர இறைவா, உம்மையே வேண்டுகிறோம்.*

*இரக்கம் காட்டுபவராம் இறைவா,*

*எம்மை குணப்படுத்துவதற்காக காயப்பட்ட இயேசுவின் பாடுகள் வழியாக, எங்கள் உடல், உள்ள, ஆன்ம நோய்களை குணப்படுத்தி புது வாழ்வு அளிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

*உயிர்த்த இயேசுவின் உயிரே எம் தந்தையே!*

*உமது உடனிருத்தலால் திடம் பெற்ற எம்மவர் எங்கும் நன்மைத்தனமே நடமாடச் செய்தார். உமது திருஅவையும் அதன் உழைப்பாளர்களும் இயேசுவின் நீட்சிகளாகத் துலங்கிட வரம் தர இறைவா, உம்மை வேண்டுகிறோம்.*